# துரோகத்தின் மொத்த உருவம் எடப்பாடி பழனிசாமியால் ஒருபோதும் ஆட்சிக்கு வர முடியாது!

## நெல்லையில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 2–ஆம் பக்கத் தொடர்ச்சி!



துரோகத்தின் மொத்த உருவமான தன்னை, மக்கள் புறக்கணித்துவிடுவார்கள் என்று முடிவு செய்துவிட்டார். அதனால்தான், பத்து தோல்வி பழனிசாமி, நம்முடைய திட்டங்களையெல்லாம் காப்பி அடித்து, புதிதாக ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு வந்திருக்கிறார்.

முதலில், மகளிர் உரிமைத்திட்டம்! கடந்த தேர்தலின்போது, இந்தத் திட்டத்தை நாம் அறிவித்த போது, இதைச் செயல்படுத்தவே முடியாது என்று பழனிசாமி சொன்னார். மக்களிடம் அந்த அறிவிப்பிற்குக் கிடைத்த வரவேற்பை பார்த்து, கடந்த தேர்தலிலேயே, அவரும் மகளிர்க்கான உதவித்தொகையை வழங்குவோம் என்று, நம்மை விட அதிகமான தொகையை சொன்னார். ஆனால், மக்களான நீங்கள் என்ன முடிவெடுத்தீர்கள்? கூசாமல் பொய்களை மட்டுமே பேசும் பழனிசாமியை நம்ப மாட்டோம் - துரோகங்களை மட்டுமே விரும்பி செய்யும் பழனிசாமியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற, புதிய விடியலுக்காக உதயசூரியனுக்குத்தான் வாக்களிப்போம் என்று சொல்லி வாக்களித்தீர்கள். நாங்களும் சொன்னது போன்றே, உரிமைத்தொகை கொடுக்கிறோம்.

### 11வது தோல்வியை பழனிசாமிக்குத்தர மக்கள் தயாராகி விட்டார்கள்!

இப்போது, அ.தி.மு.க. பா.ஜ.க போட்ட சதித்திட்டத்தை முறியடித்து ஐந்தாயிரம் ரூபாயும் வழங்கிவிட்டோம்! அடுத்து திராவிட மாடல் 2.0-வில் ஆயிரத்தை இரண்டாயிரமாக உயர்த்தித் தரப் போகிறோம் என்று அறிவித்துவிட்டோம்! அதே போன்று, விடியல் பயணத்திலும் பெண்கள் சுதந்திரமாகப் பயணிக்க ஆரம்பித்துவிட்டீர்கள்! ஆனால், இந்தத் திட்டங்களை எல்லாம், கொச்சைப்படுத்திப் பேசினார் பழனிசாமி!

இப்போது நம்முடைய திட்டங்களை முடக்குவோம்; தவிர்ப்போம் என்று சொல்லிக்கொண்டு பிரச்சாரத்திற்குச் சென்றால் மக்கள் விரட்டியடிப்பார்கள் என்று தெரிந்து கொண்டு, மகளிர் உரிமைத்திட்டத்திற்குக் குலவிளக்கு என ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு வந்திருக்கிறார். இதைப் பார்த்து, மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றால், “ஸ்டாலின் சொன்னதை மட்டுமல்ல – சொல்லாததையும் செய்வார்! ஆனால், பழனிசாமி சொன்னதையும் செய்யமாட்டார்; சொந்தமாகவும் செய்யமாட்டார்” என்று கமெண்ட் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்! பழனிசாமிக்கு, பதினோராவது தோல்வி ஸ்டிக்கரை ஒட்ட மக்களும் தயாராகிவிட்டீர்கள்!

ஏன் என்றால், களத்தில் இருப்பது யார்? சூப்பர்ஸ்டார்! “சூப்பர்ஸ்டார் யாருனு கேட்டால் தி.மு.க. தேர்தல் அறிக்கைனு சின்ன குழந்தையும் சொல்லும்!”. ஒரு பாட்டே இருக்கிறது. இப்போது I.P.L. நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, நிறைய சிக்ஸர்களை எல்லாம் பார்த்திருப்பீர்கள். தேர்தல் அறிக்கை மூலமாக நாம் அடித்த சிக்ஸர்களில் சிலவற்றை மட்டும் இப்போது ஹைலைட்டாக சொல்கிறேன்.

### சிக்ஸர்கள் எத்தனை சிக்ஸர்கள்!

**முதல் சிக்ஸர் – இல்லத்தரசிகளுக்கு கூப்பன் வழங்கும் திட்டம்... எவ்வளவிற்குக் கூப்பன் தரப் போகிறோம்? எட்டாயிரம் ரூபாய்க்குக் கூப்பன்! இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை, புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால், பழைய பொருளை எக்ஸ்சேஞ்ச் செய்து புது பொருளையும் வாங்கிக் கொள்ளலாம்! உங்களுக்குப் பிடித்த கடையில் உங்களுக்குப் பிடித்த பிராண்ட்டை வாங்கிக் கொள்ளலாம்!**

**அதுமட்டுமல்ல, இல்லத்தரசிகளுக்கு இனிமேல், உரிமைத்தொகை இரண்டாயிரம் ரூபாயாக கிடைக்கப் போகிறது!**

**அடுத்தடுத்த சிக்ஸர்களை வரிசையாக சொல்கிறேன்...**

**காலை உணவுத்திட்டம் – குழந்தைகளின் பசியைப் போக்கும் திட்டம் மட்டுமல்ல, இல்லத்தரசிகளின் பணிச்சுமையைக் குறைக்கும் திட்டம்! முதலில் ஐந்தாம் வகுப்பு வரை இருந்து காலை உணவுத்திட்டத்தை, இனிமேல் எட்டாம் வகுப்பு வரைக்கும் விரிவாக்கம் செய்யப் போகிறோம்!**

**அதேபோன்று, 20 இலட்சத்திற்கும் அதிகமான உழவர்கள் பயன்பெறும் வகையில், எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்புசெட்டுகளை வழங்கப் போகிறோம்!**

**புதுமைப்பெண் திட்டத்திலும், தமிழ்ப்புதல்வன் திட்டத்திலும் இனிமேல் மாதம் ஆயிரம் அல்ல; ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப் போகிறோம்!**

**உயர்கல்வி முடித்த 5 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், நான் முதல்வன் திட்டத்தில் ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகையுடன் 6 மாதம் பயிற்சி வழங்கப் போகிறோம்.**

**நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.**

**முதியோர் உதவித்தொகை ஆயிரத்து 200 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**மீன்பிடித் தடைக்கால சிறப்பு நிவாரணத் தொகை 8 ஆயிரம் ரூபாயில் இருந்து 12 ஆயிரம் ரூபாயாகவும், மீன்பிடிக் குறைவுக் காலச் சிறப்பு நிவாரணத் தொகை 6 ஆயிரம் ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.**

2030-ஆம் ஆண்டுக்குள் மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான கருவிகள் இரண்டு மடங்காக்கப்படும்.

தொழிற்சாலைகள் அதிகமுள்ள நகரங்களில், பெண்கள் வேலைக்குச் செல்வதை எளிதாக்கும் பொருட்டு, ஆயிரம் குழந்தைகள் காப்பகங்கள் உருவாக்கப்படும்.

பெண்களின் பாதுகாப்பிற்காக அனைத்து நகரங்களுக்கும் ‘பிங்க் பேட்ரால்’ வாகனங்கள் விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுயஉதவிக் குழுப் பெண்கள் ஷேர் ஆட்டோ வாங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்றுத் தரப்படும்.

கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக, வீடற்ற ஏழைகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

தென் மாவட்டங்கள் கல்வி மற்றும் சுகாதாரக் குறியீடுகளில் உரிய வளர்ச்சியை பெறவும், தொழில்மயமாவதை உறுதிசெய்யவும் இந்தத் தென்மாவட்டங்களுக்காக ஒரு சிறப்பு வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும்.

நாங்கள் சொன்னால், சொன்னதைச் செய்வோம்! நான் கலைஞரின் மகன்! சொன்னதை மறக்கவும் மாட்டேன்; மறுக்கவும் மாட்டேன்!

இத்தனை சாதனைகளைச் செய்துவிட்டு, எதிர்காலத்திற்கான தொலைநோக்குத் திட்டங்களை உருவாக்கிவிட்டு, நான் உங்களிடம் வாக்கு கேட்டு வருகிறேன்.

ஆனால், டபுள் எஞ்சின் – டப்பா எஞ்சின் என்று வரும், அமித்ஷா ஆட்டுவிக்கும் பழனிசாமி அங்கம் வகிக்கும் N.D.A. கூட்டணியின் இலட்சணம் என்ன? மக்களுக்காக அவர்கள் செய்ததெல்லாம் என்ன?

2014-இல் பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்தார். 2016-இல் பணமதிப்பிழப்பு நடவடிக்கை என்று சொல்லி, நாட்டு மக்கள் எல்லோரையும் பேங்க் வாசலிலும், ஏ.டி.எம். வாசலிலும் இரவு பகலாகக் கால்கடுக்க நிற்க வைத்தார்? எத்தனை பேர் இறந்தார்கள்?

அடுத்து, கொரோனா வந்தது. எல்லோரும், வீட்டில் இருக்கும் தட்டைத் தட்டுங்கள் – மணியடிங்கள் என்று ஒரு காமெடி ஷோவே நடத்தினார். கோடிக்கணக்கான மக்களை, நடுத்தெருவில் நடக்க வைத்தார். ஆக்சிஜன் சிலிண்டருக்காக மக்களை அல்லல்பட வைத்தார்.

இப்போது மேற்காசியப் போர் நடக்கிறது. பொறுப்பான மாநில அரசாக, நாங்கள் முதலிலேயே சலுகைத் திட்டங்களை அறிவித்துவிட்டோம். ஆனால், பிரதமர், கொரோனா காலம் மாதிரி ரெடியாக இருங்கள் என்று சொல்லிவிட்டு, மக்களை கேஸ் சிலிண்டருக்காகக் காத்திருக்க வைத்திருக்கிறார்.

இதெல்லாம் ஒட்டுமொத்த இந்தியாவிற்கு என்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் பா.ஜ.க. ஆட்சியில், தமிழ்நாட்டிற்குக் கல்வி நிதி இல்லை. ஜி.எஸ்.டி இழப்பீடு இல்லை. நீட் தேர்வு விலக்கு இல்லை. தமிழ்மொழி வளர்ச்சிக்கு நிதி கிடையாது. இரயில்வே திட்டங்கள் கிடையவே கிடையாது. மெட்ரோ ரயில் திட்டம் இல்லை.

### அத்திபூத்த மாதிரி ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு மதுரை, எய்ம்ஸ்!

அத்திபூத்த மாதிரி ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு என்று மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை அறிவித்தார்களே... அதன் நிலைமை என்ன? அந்த ஆர்டரை யாராவது ஒருவர் எடுத்துக்கொண்டு, டெல்லியிலிருந்து பொடிநடையாக மதுரைக்கு வந்திருந்தால் கூட, இந்நேரம் எய்ம்ஸைக் கட்டிமுடித்திருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டிற்கு இன்றைக்கு வரைக்கும் எய்ம்ஸ் கட்டடம் வரவில்லை! தமிழ்நாட்டிற்கு ஒன்றுமே இல்லை என்பதுதான் மோடி மாடல்!

இந்த நிலையில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. என்று சொன்னாலே விரட்டியடிக்கிறார்களே, எப்படி தமிழ்நாட்டில் கால் பதிப்பது என்று நினைத்தார்கள். தமிழர்களுக்கு துரோகம் செய்ய யாராவது கிடைப்பார்களா என்று வலைவீசித் தேடினார்கள். அப்படி கிடைத்தவர்தான் துரோகத்தில் டாக்டரேட் வாங்கிய பழனிசாமி!

அவருக்கு N.D.A.-வில் கொடுக்கப்பட்டிருக்கும் ரோல் என்ன தெரியுமா? சிறுபான்மையினருக்கு எதிரான பா.ஜ.க.வுக்கு வாக்கு கேட்பது! தமிழுக்கு விரோதமான பா.ஜ.க.வுக்கு வக்காலத்து வாங்குவது! இந்தியைத் திணிக்கும் பா.ஜ.க.வுக்குத் துணை போவது! அரசியலமைப்புச் சட்டத்தையே கேலிக்கூத்தாக்கும் பா.ஜ.க.வுக்கு சாமரம் வீசுவது! ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ என்று ஜனநாயகத்தைச் சிதைக்கும் பா.ஜ.க.வுக்கு, ஜால்ரா போடுவது! இடஒதுக்கீட்டையும் சமூகநீதியையும் அழிக்கும் பா.ஜ.க.வுக்கு சிவப்புக் கம்பளம் விரிப்பது! இறுதியாக, அ.தி.மு.க.-வை, அமித்ஷாவிடம் தாரைவார்ப்பது.

இப்படிப்பட்ட பழனிசாமி, நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் என்ன பேசியிருக்கிறார் தெரியுமா? எனக்கு உயிர் கொடுத்து ஆளாக்கிய தலைவர் கலைஞர். கலைஞரைநான் வீட்டுச் சிறையில் வைத்திருந்தேன் என்று நாக்கில் நரம்பில்லாமல் பேசியிருக்கிறார். எடப்பாடி பழனிசாமி அவர்களே... தோல்வி பயத்தில் எல்லை மீறிப் பேசத் தொடங்கியிருக்கிறீர்கள்.

முதலமைச்சராக என்னுடைய செயல்பாடுகளை விமர்சிக்க எதிர்க்கட்சித் தலைவரான உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. தேர்தலில் அதை மக்கள் எடைபோட்டுப் பார்ப்பார்கள். உங்களுக்குத் தக்க பதிலடியைக் கொடுக்கத்தான் போகிறார்கள். ஆனால், தலைவர் கலைஞருடன் ஒரு மகனாக என்னுடைய உறவைப் பற்றி, ஒரு சொல் பேசக் கூட உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. எந்தத் தகுதியும் கிடையாது!

தலைவர் கலைஞரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்! வாழ்ந்த காலம் வரை, கோடிக்கணக்கான தொண்டர்களை என் உயிரினும் மேலான ‘உடன்பிறப்புகளே’ என்ற ஒற்றை மந்திரத்தில் கட்டிப் போட்டிருந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். முதுமையால் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் ஓய்வெடுத்தார். நினைவாற்றலை இழந்தபோதுகூட, மருத்துவர்கள் உங்களுக்கு யாரைப் பிடிக்கும் என்று கேட்டால், “அண்ணா... அண்ணா...” என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பி அவர். முடியாத நிலையில்கூட, அறிவாலயம் செல்ல வேண்டும், முரசொலிக்கு செல்ல வேண்டும் என்று துடித்தவர். அவரை யாரும் சிறை வைக்க முடியாது. அவருடைய இதயச்சிறையில்தான் நான் உட்பட உடன்பிறப்புகள் அத்தனை பேரும் குடியிருந்தோம். எடப்பாடி பழனிசாமி அவர்களே... தலைவர் கலைஞர் பெயரைச் சொல்லக்கூட உங்களுக்குத் தகுதியும் கிடையாது; எந்தவித யோக்கியதையும் கிடையாது.

5 முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராக இருந்து, இந்தத் தமிழ்நாட்டை நீண்ட காலம் ஆண்ட ஒரே முதலமைச்சர், தலைவர் கலைஞர். அவருடைய கடைசி ஆசை என்ன? அவருடைய தலைவராகப் பேரறிஞர் அண்ணாவிற்கு அருகே அடக்கம் செய்ய வேண்டும். அப்பாவுக்காக அல்ல, தலைவருக்காக. நானே உங்கள் வீட்டுப் படியேறி வந்து, கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டேனே... என்னுடைய தந்தைக்காக அல்ல, தமிழினத்தின் தலைவர் அவர். கடற்கரையில் இடம் கொடுங்கள் என்று அந்தச் சோக சூழ்நிலையில்கூட உங்கள் முன்னால் வந்து நின்றேனே... கொடுத்தீர்களா? இரக்கம் இல்லாமல் மறுத்தவர்தானே நீங்கள்! அப்படிப்பட்ட உங்களுக்கு, எங்கள் தலைவரைப் பற்றி பேச எந்த யோக்கியதையும் கிடையாது.

உங்கள் யோக்கியதை என்ன தெரியுமா? உங்களை நம்பிப் பதவி கொடுத்த சசிகலாவின் காலையே வாரிவிட்டவர் நீங்கள். நம்பிய டி.டி.வி. தினகரனையும், சகோதரர் O.P.S. அவர்களையும் முதுகில் குத்தியவர் நீங்கள். உங்களுக்கு நினைவிருக்கிறதா? அம்மையார் ஜெயலலிதா அவர்கள் உடல் நலக்குறைவால் சட்டமன்ற அவைக்கு வராமல் இருக்க ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதை ஆதரித்த இயக்கம் தி.மு.க. இதுதான் உங்களுக்கும் – எங்களுக்கும் இருக்கும் வித்தியாசம்!

### எந்தக் காலத்திலும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவே முடியாது!

அடித்துச் சொல்கிறேன்... உங்களால் எந்தக் காலத்திலும் ஆட்சியை பிடிக்கவே முடியாது. உறுதியாக சொல்கிறேன்... கலைஞரின் உடன்பிறப்புகள் இருக்கும் வரை உங்களால் ஆட்சியின் பக்கமே வர முடியாது. இது உறுதி.

தமிழ்நாட்டைக் காக்க, திராவிட முன்னேற்றக் கழகம்தான் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்று மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்! இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வளர்ச்சி நீடிக்க வேண்டும் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆள வேண்டும்! தமிழ்நாடு தலைநிமிர்ந்தே இருக்க வேண்டும் என்றால், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான், வெற்றி பெற வேண்டும்! அந்த வெற்றி, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் மாபெரும் வெற்றியாக இருக்க வேண்டும்!

நீங்கள் எல்லோரும் ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்... நாம் போராடுவது தி.மு.க.வின் வெற்றிக்காக மட்டுமல்ல; நம்முடைய கூட்டணியின் வெற்றிக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வெற்றிக்காக! மறந்துவிடாதீர்கள்.

எனவே, அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நம்முடைய தாய்த் தமிழ்நாட்டைக் காக்க, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் அப்பாவு அவர்களுக்கும், பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் அப்துல் வகாப் அவர்களுக்கும், திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் சுப்பிரமணியன் அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தை ஆதரிக்க வேண்டும்.


அதேபோன்று, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர் ரூபி மனோகரன் அவர்களுக்கும், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் V.P. துரை அவர்களுக்கும், கை சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளித்து, வெற்றி பெற வைக்க வேண்டும்.

அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், எங்களின் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் அளவிற்கு சிறப்பான ஆட்சியை, தமிழ்நாட்டைப் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்லும் ஆட்சியை, நாங்கள் வழங்குவோம்! உங்கள் எல்லோருடைய ஆதரவுடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தமிழ்நாட்டைக் காக்கும்! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ‘சூப்பர் ஸ்டார்’ யாருனு கேட்டால்...!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாட்டு!



**நெல்லையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தலைவர் – முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், உரையின் இடையே**

**“சூப்பர் ஸ்டார் யாருனு கேட்டால்**
**தி.மு.க. தேர்தல் அறிக்கைனு**
**சின்னக் குழந்தையும் சொல்லும்”**

**என்று ராகம் போட்டு பாடினார்...**

**அதைக் கூடியிருந்த இலட்சோப இலட்சம் மக்கள் ஆரவாரத்துடன் கைத்தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.**

## மலிவும் மடப்பாடியும்!



ரத்த உறவும்
பெத்த புள்ளயும்
இல்லாத ஒருவரது
அந்திம காலம்
எவ்வளவு
கொடுமையானது
என்பதற்கு
அம்மாவின்
இறுதிக் காலமும்...

பெத்த புள்ளையும்
ரத்த உறவும்
அன்பே வடிவாகி இருந்தால்

ஒருவரது
அந்திம காலம்
எப்படிபாசத்தால் நிறைந்து ததும்பும்
என்பதற்கு
முத்தமிழ் அறிஞர் கலைஞரின்
முதுமைக் காலமுமே சாட்சி..
இதனை
உலகமே அறியும்...

அதனால..

வாய்க்குள்
அடங்காத
பல்லோடும்

வாய்மைக்கு
அடங்காத
சொல்லோடும்

நாகரீகமற்று
மலிவாகப்
பேசுவதை
திருவாளர்
மடப்பாடி
நிறுத்திக் கொள்வது உத்தமம்...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## போஸ் வெங்கட் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 6-4-2026 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் |
| 7-4-2026 | திருவண்ணாமலை தெற்கு | கீழ்ப்பென்னாத்தூர் |
| 8-4-2026 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 10-4-2026 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் |
| 11-4-2026 | திருச்சிராப்பள்ளி தெற்கு | மணப்பாறை |
| 12-4-2026 | திருச்சிராப்பள்ளி மத்திய | திருவரங்கம் |
| 13-4-2026 | திருச்சிராப்பள்ளி தெற்கு | திருவெறும்பூர் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.